**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.166 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.சாலம்மாள்

Date : 07.01.2025

**குறுக்கு விசாரணை**

என் தாத்தா பெயர் பெருமாள். என் பாட்டி பெயர் முத்தம்மாள். என் தாத்தா பாட்டிக்கு குப்பன் (எ) முனுசாமி, வெங்கட்ராமன் மகன்கள். வெங்கட்ராமன் இறந்து விட்டார். வெங்கட்ராமன் எனக்கு சித்தப்பா ஆக வேண்டும். குப்பன் (எ) முனுசாமியின மனைவி 2ம் பிரதிவாதி மாதம்மாள் என்றால் சரிதான். குப்பன் (எ) முனுசாமிக்கும் மாதம்மாவுக்கும் 1 முதல் 3 வாதிகள் மகள்கள். 3ம் பிரதிவாதி மகன் ஆவார்.

2) நான் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் சுமார் 2 ஏக்கர் இருக்கும். தாவா சொத்தின் சர்வே எண் 180ஏ, 180சி ஆகும். தாவா சொத்துக்களின் சர்வே எண்களை கொடுத்து சொத்து விவரங்களை சொன்னேன். தாவா சொத்துக்கள் என் பாட்டி முத்தம்மாவின் பூர்வீக சொத்துக்கள். முத்தம்மாவின் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் படிக்கவில்லை என்பதால் தெரியவில்லை. தாவா மற்றும் பிரமாண வாக்குமூல விவரங்களை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். சொத்து விவரங்கள யாருக்கு பாத்தியம என்று தெரியமாலேயே அறிவிப்பு வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. முதலில் அனுப்பிய அறிவிப்பு தவறானது என்பதால் இன்னொரு நோட்டீஸ் அனுப்பியுள்ளேன்.

3) நான் தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தாவா சொத்துக்கள் பெருமாளுக்கு சொந்தமானதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 136/119 23 ஏர்ஸ் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 136/119 வேறு ஒரு நபருக்கு சொந்தமானது என்றாலும் தவறான சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யாருக்கு பாத்தியம் என்ற விவரம் யாரிடமிருந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றும், நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியவில்லை. மேற்கு பக்கம் லட்சுமி, தெற்கு பக்கம் சக்தி, கிழக்கு பக்கம் செந்தில், வடக்கு பக்கம் மாயகண்ணனின் நிலமுள்ளது.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*